# AGAMUDAIYAR EDUCATIONAL UPLIFT ASSOCIATION

(Registration No. 75/1958)
24-A, Montieth Road, Egmore, Chennai, Tamil Nadu - 600 008.
E-mail : agamudaiyars1958@gmail.com Website : www.agamudaiyarkalvi.org
Phone : 044 - 2855 4327, 4855 4327


அன்பு உறவுகளே, 16.07.2025

கடந்த 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் என் தலைமையில் பதவியேற்றுக்கொண்ட நிர்வாகிகள் உள்ள நிர்வாகத்தின் கடந்த ஒரு வருட கால பணிகளை தங்களுக்கு தெரிய படுத்தும் விதமாக பட்டியல் இட்டிருக்கிறோம்.

1. நமது சங்கத்திற்கான புது சின்னத்தை உருவாக்கியுள்ளோம்.

2. நமது சங்கத்தின் பதிவு அலுவலகத்தின் பெயர் பலகையை பெரிதாக மாற்றி உள்ளோம்.

3. 2025 ஆம் ஆண்டிற்கான நமது சங்கம் மற்றும் அறக்கட்டளையின் சார்பில் 500க்கும் மேற்பட்ட நாட்காட்டிகளை அடித்து உறுப்பினர்களுக்கு வழங்கி உள்ளோம்.

4. நமது அகச்சுடர் புத்தகங்கள் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பிரதிகளை உறுப்பினர்களுக்கு இதுவரை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

5. கடந்த 2022, 2023, 2024 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு அறிக்கை பெறப்படாமல் இருந்தது. கணக்காய்வு அறிக்கைகள் அனைத்தும் பெற்று வருமான வரி அலுவலகத்தில் தாக்கல் செய்து அதனையும் பூர்த்தி செய்துள்ளோம்.

6. கடந்த காலங்களில் நமது சங்கத்தின் இணையதளத்திற்கு இன்று வரை தரவேண்டிய பாக்கித்தொகையான ரூபாய். 85,000த்தை தந்து கணக்கை முடித்துள்ளோம்.

7. தற்போது இணையதள மேம்பாட்டு பணிக்காக ஆகும் செலவான 2 லட்ச ரூபாயில் இதுவரை ஒரு இலட்ச ரூபாய் முதல் தவணையாக கொடுத்துள்ளோம்.

8. நமது சங்கம் மற்றும் அறக்கட்டளைகளின் சொத்துக்களின் அசல் ஆவணங்களையும் மற்றும் முக்கியமான கோப்புகளையும் நமது வங்கி பெட்டகத்தில் பாதுகாப்பாக வைத்துள்ளோம். இதற்காக ஆண்டு சந்தாவான 12 ஆயிரம் ரூபாய் செலுத்தி வருகிறோம்.


| President | Secretary | Treasurer |
|---|---|---|
| G. RAVANAN M.Tech, M.B.A. | Lion A. SARAVANAN B.A. | LIC K. GANESAN |
| Ph : 94440 33777 | Ph : 95001 22445 | Ph : 94441 81140 |

9. நமது சங்க பதிவு அலுவலகத்தின் அளவை மாற்றி பெரியதாக அமைத்துள்ளோம்.

10. நமது சங்கம் மற்றும் அறக்கட்டளைக்காக அகமுடையார் டாட் இன் என்ற டொமைன் பெயரை உருவாக்கியுள்ளோம்.

11. நமது சங்கம் மற்றும் அறக்கட்டளை என பேஸ்புக், வாட்ஸ் அப், இன்ஸ்டாகிராம் பக்கங்களை உருவாக்கி உள்ளோம்.

12. 6330 உறுப்பினர்கள் கொண்ட இந்த பழமையான சங்கத்தின் உறுப்பினர்கள் விவரங்களை கணினி மூலம் பதிவேற்றி அனைவருடைய விவரங்களையும் தற்போது எல்லோரும் அறியும் வகையில் உருவாக்கியுள்ளோம்.

13. கடந்த ஆண்டு எனது நிறுவனமான வாக்ஸ் குழுமத்தின் மூலம் நமது அகமுடையார் சங்கங்களின் நிர்வாகிகள் பரிந்துரையின் பேரில் 50க்கும் மேற்பட்டோருக்கு கல்வி ஊக்கத் தொகையை வழங்கி உள்ளோம். அதேபோல இந்த ஆண்டு 100 பேருக்கு கல்வி ஊக்கத்தொகை கடந்த ஜுன் மாதம் வழங்கி உள்ளோம்.

14. திரு அரப்பா அவர்களுக்கு நினைவேந்தல் நிகழ்வு நமது மாமன்னர் மருதுபாண்டியர் மாளிகையில் வெற்றிகரமாக நடத்தி முடித்துள்ளோம். இந்நிகழ்வில் செந்தமிழன் திரு. சீமான் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தார்.

15. கடந்த ஆண்டு 320 அகமுடையார் இன மாணவ மாணவிகளுக்கு கல்வி ஊக்கத்தொகை கொடுத்து மாபெரும் விழாவாக நடத்தி முடித்துள்ளோம். இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக திரு. இராஜரத்தினம் ஐ.ஏ.எஸ், திருமதி. வனிதா டி.ஐ.ஜி. மற்றும் திரு.செந்தில் வேலவன் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

16.நமது சங்கம் பிளவு பட்ட சமயத்தில் போடப்பட்ட நான்கு வழக்குகளை உயர் நீதிமன்றத்தில் சென்று அதனை முடித்து வைத்துள்ளோம்.

17. நமது சங்கத்தின் 800 ஆவது செயற்குழு கூட்டத்தின் கூட்டத்தினை மாபெரும் விழாவாக நடத்தி முடித்துள்ளோம். இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக திரு. கணேசன் ஐ.ஏ.எஸ், திரு.இராமசாமி சேர்வை அவர்கள் பங்கேற்று விழாவினை சிறப்பித்தனர்.

18. அந்த விழாவில் கலந்து கொண்ட நிர்வாகிகள் மற்றும் சிறப்பு அழைப்பாளர்கள் அனைவருக்கும் நினைவு பரிசை வழங்கியுள்ளோம்.

19. நமது சங்கத்தின் சார்பில் கடந்த ஜனவரி மாதம் நமது மாமன்னர் மருதுபாண்டியர் மாளிகையில் ஒரு மாபெரும் மருத்துவ முகாம் நடத்தி 200க்கும் மேற்பட்டோர் பயனடையும் வகையில் நடத்தி முடித்துள்ளோம்.

20. திரு. நீலன் அவர்களுக்கு நினைவேந்தல் மற்றும் படத்திறப்பு நிகழ்வு 13.04.2025 அன்று நமது மாமன்னர் மருதுபாண்டியர் மாளிகையில் சீரும் சிறப்புமாக நடத்தி முடித்துள்ளோம். இந்நிகழ்வில் காங்கிரஸ் கமிட்டியின் முன்னாள் தலைவர், முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர் திரு. சு.திருநாவுக்கரசு, முன்னாள் மாநிலங்களவை உறுப்பினர், திராவிட முன்னேற்ற கழகத்தின் அமைப்பு செயலாளர், திரு. டி.கே.எஸ்.இளங்கோவன் மற்றும் நீலன் குடும்பத்தினர் கலந்து கொண்டு விழாவை சிறப்பித்தனர். அதை தொடர்ந்து சுமார் 200 ஏழை எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

21. நமது சங்கத்தின் சார்பில் வியாசர்பாடியில் ஒரு மாபெரும் மருத்துவ முகாம் நடத்தி 300க்கும் மேற்பட்டோர் பயன்பெறும் வகையில் ஒரு மாபெரும் கேம்ப் நடத்தி முடித்துள்ளோம்.

22. நமது சங்கத்திற்கு சொந்தமான செங்குன்றம் இடத்தை அரசாங்கத்தின் மூலம் நிலத்தை அளந்து நமது அறக்கட்டளையின் பேரில் பட்டா பெற்று முடித்துள்ளோம்.

23. நமது மாமன்னர் மருது பாண்டியர் மண்டபத்தின் உட்புறம் முழுவதுமாக வர்ணம் பூசும் பணியை முடித்துள்ளோம்.

24. மேலும் நீர் பற்றாகுறையை தீர்க்கும் விதமாக புதிய ஆழ் கிணறு அமைத்துள்ளோம்.

25. நமது மாமன்னர் மருது பாண்டியர் மாளிகையில் ஒரு கொடி கம்பத்தை நிறுவி இந்த ஆண்டு முதல் குடியரசு தினதன்று தேசிய கொடியை ஏற்றி விழாவை சிறப்பாக நடத்தி முடித்துள்ளோம்.

26. மேலும் மாமன்னர் மருது பாண்டியர் மண்டபத்திற்கு வெளியில் உணவு அருந்திய பின்னர் ஓய்வு எடுக்கவும், இனிப்பு கடை அமைக்கவும் மேற்கூரை அமைக்கும் பணியும் நடைபெற்று முடிந்துள்ளது.

27. இதுவரையில் நமது மாமன்னர் மருதுபாண்டியர் மாளிகைக்கு கனரா வங்கியில் பெறப்பட்ட கடன் தொகையினை வட்டியும் முதலுமாக அனைத்து தவணைகளையும், நிலுவைத் தொகையினை இன்று வரையில் இதுவரை சீராக திரும்பி செலுத்திய உள்ளோம்.

இந்த பணிகள் அனைத்தும் நிர்வாகிகளின் திறமையாலும், செயல்பாட்டாலும் மட்டுமே சாத்தியமானது. அனைத்து நிர்வாகிகளுக்கும் இந்த வேளையில் எனது நன்றியும் பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் இந்த பயணம் தொடர உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும், ஆதரவையும், அறிவுரையும் எதிர் நோக்குகிறேன்.

இப்படிக்கு,

**இராவணன் ஞானசுந்தரம்**

**தலைவர்**
**அகமுடையார் கல்வி வளர்ச்சி சங்கம்**